உ

கணபதி துணை.

பார்க்கவ புராணமாகிய

விநாயகபுராணத்திலுள்ள

தூர்வையாசகப் படலம்.

இஃது

தேவிகோட்டை

ஸ்ரீ வன்றொண்டரவர்கள்

மாணாக்கருளொருவராகிய

காரைக்குடி

ராம. சொ. சொக்கலிங்கச்செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்று

தேவிகோட்டை

ஸ்ரீமான்: அரு. அரு. சோம.

சோமசுந்தரச் செட்டியாரவர்களால்

காரைக்குடி

“ஞானம்பிகா” ப்ரிண்டிங் வொர்க்ஸில்

அச்சிடப்பெற்றது.

பிங்கள-௵ புரட்டாசி-மீ

1917.

சிறப்புப்பாயிரம்.

இந்நூலாசிரியர் மாணாக்கருளொருவரும்
திருப்புத்தூரைச்சார்ந்த தம்பிபட்டி
வேலுக்கவிராயர் பௌத்திரருமாகிய

சொ. வேலுச்சாமிக் கவிராயர் இயற்றியது.

சொன்மலியுங் கற்பதரு நினைபொருளே கொண்டலர்க டோற்று நிற்ப
னென்மலியுந் திருவளங்கள் பலவுநினைப் பளவின்றி நிலவுங் காரைப்
பொன்மலியும் வணிகர்குல ராமநாதக்குரிசில் புரிந்து முன்செய் [தோன்
றொன்மலியுந் தவப்புதல்வன் மெய்ந்நூல்கள் பலவுணர்ந் தோற்றம் வாய்ந்

அன்னையுமத் தனுஞ்சிவனென் றகந்தெளிந் துசிவபூசையன்பிற்செய்வோன்
என்னையுந்தன் னுளத்தருள்கூர்ந் தருணூல்கள்பலவெனக்கிங் கெளிதிலீந்தோ
மன்னுபுகழ்ச் சொக்கலிங்க தேசிகன்கற் றவர்க்குவகை மல்கப்பன்னூல்[ன்
பன்னினன்மற் றவருமெளி துண்மையுணர்ந் துயவிதுவே பாங்கிற்றாகும்.

எனக்கருதி யறிவில்சிலர் நாம்பிரம மெனுஞ்சழக்கி லிழியா தீசன்
றனக்குவழி பாடுசெயு மடிமையென வெளிமையினிற் றடையி லாதே
யுணர்த்துவிநா யகபுரா ணத்தூர்வை பாசகச்சீ ரோதுங் காதை
யினைக்கடியு மாயாவா தப்பொருட்கோண் மறுப்புமியைத் திலங்க நாட்டி.

கத்தியசூ பத்திரியற்றி யளித்தனனிந் நூன்மகிமை கருத்துற் றோர்ந்தும்
வித்தகவா ரியத்தினின்று தமிழின்வரலாலந்தப் பெயரைமேற்கொ
ளுத்தமனல் வாளுமுன்னை யாரியத்தின் பொருளேகொண் டோங்க லாலே
மெத்தியவா ரியப்பெயர்கொண் டுலகுப்ப வெளிவரலே விழைவதென்று

இந்நூலா சிரியனுந்தா னும்பெயர்முற் பலவகையி லியைவதோர்ந்து
மிந்நூலை வெளிவரச்செய் துளமகிழ்ச்சி யுறமேந்தல் யாவனென்னி
லந்நூலின் முறைமைசிவார்ச் சனைபுரிவோன் குணங்களுக்கா கரம தானோ
னின்னுதவ றிஞர்களுக்கின் சொலினோ டென்னாளு மீயும் வள்ளல். (ரு)

வாரிதிசூ ழுலகினிடை யுரையெல்லாந் தன்புகழே வயங்க வைப்போன்
சீருறுமா பரம்பரையிற் செல்வமொடு கல்விநலந் திகழப் பெற்றோன்
பேரியலார் சிவபணிகள் பலபுரிவோன் வசியர்குலப் பேறு யுள்ளோன்
தாருறுதே முல்லையினூன் றிகழ்சோம சுந்தரப்பேர்த் தனதன் மன்னோ.



கணபதி துணை.

பார்க்கவ புராணமாகிய
விநாயக புராணத்திலுள்ள
§ தூர்வை யாசகப் படலம்.

இதில், நானே பிரமமென்கின்ற ஏகாத்மவாதிகளால் ஞான சனகரென்று துதிக்கப்பட்ட மிதிலாபுரி யரசரானவர், மற்றெல்லாம் பொய்யே; பிரமமொன்றே மெய்; நானே அப்பிரமமெனக் கொண்ட அகந்தை வசத்தராய்த், தம்முன் வந்து பரமேசுரானுக்கிரகத்தால் உனக்குச் சகல சம்பத்துமுண்டாகுகவென்று ஆசீர்வதித்த நாரத முனிவரைச் சிறிது மதியாது, நானே பிரமமாயிருக்க எனக்குமேலொரு ஈசுரனுண்டா? அவனால் நான் பெறவேண்டியதுண்டா? எல்லாருக்குங் கொடுப்பவன் நானே யென்று செருக்குற்றுரைப்ப, அதுகேட்ட முனிவர், அங்கு நின்றுஞ் சென்று இதனைவிண்ணப்பித்து வேண்டிக் கொண்டதற் கிரங்கி விநாயகப் பெருமான், அச்சனகரிடம் வந்தருளி, அவர் நானே பிரமமெனக்கொண்ட மார்க்கம், வேதசிவாகமாதி சகல சாஸ்திர விரோதமான சர்வாபாச மார்க்கமேயாமென்பதைநேரே விளக்கி, எல்லாவற்றினுஞ் சிறந்த உத்தமோத்தம மார்க்கஞ் சைவசித்தாந்தமேயென்று தெளிவித்தருளியபின், அவ்வரசர் முன்கொண்டமார்க்கம் மூடமார்க்கமேயெனத்தெளிந்து, அதனை அடியோடு தொலைத்துவிட்டுச், சைவசித்தாந்த சன்மார்க்க மேற்கொண்டு, முன்னிருந்த அகந்தைநீங்கித், தனக்குமேலொரு தலைவனுளன், அவனே பரமபதியாகிய உமாபதி,நாமெல்லாம் அவனடிமைகளே யெனத் தெளிந்தடங்கி, எல்லாப்பற்று நீங்கிச் சிவஞானியாயிருந்துலகாண்டு திருவடியடைந்தாரென்னுஞ்சரித்திரம் விளங்குகின்றது.

இஃதிங்ஙனமாகவும், வேத சிவாகமாதி சகல சாஸ்திரங்களும் ஆண்டானடிமைத் திறமே கூறுவனவாகவும், இவற்றையெல்லாமுற்றுநோக்குதற்குரிய ஆகூழ் வலியில்லார்சிலர், போகூழ்வலியினாலே, சில உபநிடதாதிகளைத் தமது கருத்துக்கிணங்கத் திரித்துப் பொருள்கொண்டு சீவனில்லை, ஈசுரனில்லை, செகத்தில்லை,பாவ புண்ணியமில்லை, சுவர்க்க நரகமில்லை, பந்தமோக்ஷ

---

§ தூர்வை—அறுகு.

மில்லை, நாமே பிரமம்; நாம் எது செய்யினுஞ் செய்யலாம்; அச்செயல்களி லொன்று நம்மைச் சேராதென் றிவைபோல்வன பலகூறி, அதனாலே புண்ணிய பாவாதிகளாற் பிரயோசன மில்லையென்றே விளங்கவைத்து, விபூதி ருத்திராக்ஷாதிகளுந் தமது கருத்தின்படி பொய்யென்றே ஒழித்துவிட்டால் தம்மைப்பிறர்வந்தடுக்கமாட்டார்களென்றோ? அவற்றைமேற்கொண்டுவஞ்ச வேடங்காட்டிக், கடவுளுண்டு, நாம் அடிமை, பாவ நீக்கிப் புண்ணியஞ்செய் துய்யவேண்டுமென்னும் உலகர் வழக்கநோக்கி, அவ்வழி மேற்கொண்ட அவ்வளவேயன்றி, அவ்வழியிலுறைத்து நிற்றற்குரிய சைவ சாஸ்திர வுணர்ச்சியிற் புகுதாத சாமானியரைத் தமது வேடங்கண்டணுகும்படி நடித்திழுத்து, நாம் பிரமமெனக் கொள்ளும் நன்னிலை யிதுவே யாதொரு பிரயாசை யில்லாத மிகவெளிதான மார்க்கமாகும்; மற்றெல்லாம், நமக்கு மேலொரு கடவுளுண்டு, தலமுண்டு, தீர்த்தமுண்டு, தெரிசனாதிகளுண்டென்பன வாதியாக ஒடியாடி அலைவதேயன்றிப் பிரயோசனமில்லையென்று, அதற்குரியனவாக, (உண்மை நோக்கின்) எடுபட்டுப்போவனவாகிய சிற்சில உதாரணப்பொருத் தங்கள் காட்டி மயக்கி, அவர் செய்யுமுபசாரம் பெற்று உண்டுடுத்திறுமாந்து திரிகின்றாராதலால், அவர்களது வஞ்சவேட மயக்கிலகப்பட்டு அப் பொய் வழிப் புகுந்து மாயாமல், இச்சனகராச சரித்திர மூலமாக வுண்மைதெளிந் துலகுய்கவென்றே, இதனை, எல்லாரும் எளிதினுணரும்படி வசனரூபமாக எழுதி வெளியிடநேர்ந்தது.

இனி அச்சரித்திரத்தி னுண்மை நோக்குக.

சகல வளங்களும் நிறைந்த மிதுலாபுரியின்கண்ணே, அன்பு, நூலாராய்ச்சி, கொடை, மிக்கபோர் வல்லபம், ஒழுக்கம், இல்லறவின்ப முதலிய பலவற்றாலு மேம்பாடுடைய சனக ராசா அரசாட்சி செய்துவருங்கால், ஒரு நாள் நாரத முனிவர் அவரெதிரே சமீபத்தில் வந்தருளினார்; அவரது நல்வரவு தூரத்தே தெரிந்து எழுந்து சென்று வணங்கவேண்டிய சனகர், சமீபித்த பின்னும் வணங்காமலும், இருக்கைவிட்டெழாமலுமிறுமாந்திருந்தார். மனமாதி கரணங்களுடன் இந்திரிய விஷயாதி போகங்களை அனுபவித்துக் கொண்டேயிருந்தும், அச் சனகர் நாமே நிகரில்லாத பிரமமென்று மதித் திறுமாந்திருக்கின்ற செருக்கினால், நிர்மல சிவவாக்காகிய வேத சிவாகமாதி சிவ சாஸ்திரங்களில் ஆண்டானடிமைத் திறமே கூறுகின்ற உண்மையைச் சிறிதுமுணராது, அகம் பிரமக்கோளிலுறைத்து நிற்கின்ற மயக்கமே, மகரிஷியை வழிபாடு செய்யவொட்டாமற்றடுத்தது.

நாம் ஈடேறவேண்டுமென்றே எண்ணி, அதற்குரிய உண்மைவழியிற் செல்லாமல், ஈடேறுதற்கிடமில்லாத நாம் பிரமமென்றெழும்பு மாயாவாத நெறியில், இது மெய்ந்நெறியா? பொய்ந்நெறியா? என்பதை மெல்லச்சென்று எட்டிப்பார்த்து நிச்சயித்தபின் செல்வோமென்கின்ற யோசனை சிறிதுமின்றி, மிகவிரைந்து ஒடிச்சென்று அப்பாழ்ங் குழியிலழுந்திக்கிடத்தலால் மயக்

கமிகுந்த சனகர், ஒருதுரும்பையேனுந் திருவருளின்றி யசைக்கமுடியாத பரதந்திரராகிய தம்மைச், சர்வ சுதந்திர பிரமமே என்றுள்ளபடி மதித்திறு மாந்திருக்குங்கெர்வத்தை நாரதருணர்ந்து, அதனை வெளியிடாமல் அரசனே நீ செய்த பூர்வ புண்ணிய பலனாக சிவானுக்கிரகத்தாலிந்த ராசாங்கப் பெரு வாழ்வு பெற்றிருக்கின்றாய், மேலும் வேண்டிய நன்மை பெற விரும்பினை யாதலால் உனக்கு ஈசுரன் இன்னும் வேண்டியதை அருள்வாராக என்று ஆசீர்வதித்தனர். அதுகேட்ட சனகர், என்னைவிட வேறுதெய்வமிருந்தாலல் லவா வேண்டியதைத் தரும்; நானே பிரமமென்பதை யறியாமல் எனக்கும் மேலொரு தெய்வமுண்டென்று பேதமாக நினைப்பது மூடர் கொள்கையே யாம்; (எனவே, அந்த மூடத்தன்மை அந்நாரதற்குமுளதென்பது அவர் கரு த்து) நாமே பிரமமென்னும் அபேதவாதிகள் யாதொருபிரயோசனத்தையும் விரும்பார்கள். ஈவானும் ஏற்பானும் போகியும் யோகியும் நானன்றி வேறில்லை; நீ தெய்வ முனிவனல்லவா ‡ இவைத இனியேனு முணர்வாயென்றிக ழ்ந்துகூறி, நன்மொழிகள் தங்காமல் ஒழுகிப்போகின்ற ஓட்டைமனமுள்ள வனாதலால், முனிவர் ஆசீர்வதித்த நன்மொழிகளை ஏற்றுக்கொள்ளாமல் தள் ளிவிட்டனர். உடனே முனிவர் அச் சனகரை நோக்கி அறிவில்லாதவனே, வேத சிவாகமாதி சகல சாஸ்திரங்களும் பதி, பசு, பாச நித்தியங் கூறுதலைச் சிறிது நோக்காது, நானே பிரமமென்கின்ற அகந்தை மேற்கொண்டு செய் யும் செயல்களை யறிந்து பலன் கொடுக்கிற சர்வஞ்ஞனாகிய ஈசனு மில்லை அதனைப்பெறுகிற சீவனு மில்லையென்று இனிமேலும் பேசாதே; ஆணவம லத்தால் மறைப்புண்டு அறிவு கெட்டுக்கிடக்கின்ற நீ பசுவேயல்லது பிரம மல்ல, உனக்கு மேலாயொரு பிரம முண்டென்பதை, நீ வெட்கமுற்று நடு ங்கும்படி நேரே காட்டுகின்றோம்; அப்போது ஒப்புக்கொள்வாயென்று சொ ல்லிவிட்டுச் சென்றனர். சென்ற நாரதர் கவுண்டின்னிய முனிவர் ஆச்சிரம த்திற் சென்று அவரால் வணங்கப்பெற்று, அங்குள்ள விநாயகப்பெருமானை வணங்கி எம்பெருமானே, தேவரீர் சனகனுக்குப் பூமியாட்சியும் மிக்க செல் வமுங் கொடுத் தருளினீர்; அவனோ மோக்ஷ விருப்புள்ளவன் (மும்முக்ஷு) என்றுஞ் சொல்லப்படுகின்றான் † அச்சனகன் அப்பூமியாட்சி முதலியவெல் லாம் உமது திருவருளாலே பெற்றதை அடியோடுமறந்தனன், அம்மட்டோ? பரசிவமாகிய பிரமம் தேவரீரே என்பது முணர்ந்திலன்; அதுவுமன்றித்தன் னையே பிரமமென மதித்து நானே பிரமமெனக்கூறிக்கொண்டு பெரியோ ரை வணங்கா திறுமாந்திருக்கின்றான். இப்பெரும் பாதகத்தை விண்ணப்

---

‡ தெய்வமுனிவனல்லவா என்றது இகழ்ச்சிக்குறிப்பு.

† எனவே, அம்மோக்ஷம் பெறாத குறையுடைய சீவனே நானென்றும் அதனைப் பெறுவிக்கின்ற மோக்ஷ தாதாவாகிய பிரமம் எனக்கு மேலாயுள்ள தென்றும், அவ்விருப்பத்தாலேயே விளக்கமாகத் தெளியக்கூடிய நிலைமை லெகுவாயிருந்தும், அப்படியு முணரமாட்டாத அதி மூடத்துவத்துடன் ஆணவ மறைப்புள்ளே ஆழ்ந்து கிடக்கின்றவனென்பது தாற்பரியமென்க.

பிக்கவே தேவரீரை யடைந்தேனென்று கூறிவிட்டுச்சென்றனர். இவ்வாறு நாரதர் கூறியதைத்திருவுளங்கொண்ட விநாயகப்பெருமான், குட்டநோயுற்ற ஒரு பிராமணரூபியாய்ச் சனகராஜன் அரண்மனை முன் சென்று காவலாளரைநோக்கி, உங்கள் அரசனுக்கு என் வரவைக் கூறுங்களென்றருள, அவர்கள் சனகரை வணங்கி, மிக்க பசியினராய்க் குட்டநோயராய் ஒரு அந்தணர் வாயிலில்வந்துநின்று தெரிவிக்கச்சொன்னாரென்றுகூறி, அனுமதிபெற்று, அந்தணரை யுள்ளேபுகுத்த அந்தணர் சனகரை நோக்கி, என் பசிநீங்கும்படியான உணவுகொடுக்குக வென்றனர். சனகர் தமது குமாரனை அழைத்து, இப்பிராமணனுக்குப் பசி முழுது நீங்கும்படி முறையாகப்போசனஞ் செய்விக்குக என்றனர். குமாரன் அழைத்து உள்ளே சென்று பாதப்பிரக்ஷாளனஞ்செய்து ஆசனத்திருத்தி குருத்து விரியும் பருவத்திரண்டு வாழையிலை சேர்த்திட்டுக் கறியமுதுகளும் திருவமுதும் நிறையப்படைப்பித் துண்டருளுக என்று கூறி விசிறிப்பணி செய்துகொண்டு நிற்ப, அந்தணர் நீர் வளாவித்தமது திருக்கரத்தாற் றொட்ட அளவிலே, அங்குள்ளவர்கள் படைத்த எல்லா வற்றையுங் கண்டிலர். அரச குமாரன் மடையரை நோக்கி இன்று சமைத்த எல்லாவற்றையும் படையுங்களென்றான். அவர்கள் பாத்திரங்களில் எடுத்துவந்து படைத்தவெல்லாம், அவர்கள் வெட்குற்று நடுங்கும்படி உண்டருளினர். பின் மடையர்கள் சமைத்த பெரும் பாண்டங்களோடு எல்லா வற்றையுஞ் சொரிந்துவிட்டுக் குமாரனை நோக்கி இன்று பாகமான எல்லா வற்றையும் இவருக்கே படைத்து விட்டோம், சிறிது நேரம் பொறுத்தால் இன்னும் வேண்டியமட்டுஞ் சமைத்துக் குறைவில்லாமற் படைக்கின்றோமென்று கூறப் பிராமணர் தலையசைத்து நீங்கள் இனிச் சமைத்துப் படைப்பதிருக்கட்டும், சமையலாகாத எந்தப்பொருளாயினு மிப்போதேபடையுங்களென்றருளினர். அதுகேட்ட குமாரன் அவையெல்லாஞ் சுமந்துகொண்டுவந் திவர்க்கிடுவது துர்லபமென்று நினைந்து, அறைகளைத் திறந்துவிட்டு உண்டருளுக என்றான். பிராமணர் அக்கணமே அவையெல்லாம் அசேடமாக வுண்டருளினர். அதுகேட்ட சனகர் அதிவிரைவின் அங்குவந்து பார்த்து, இது சொப்பனமேயாகும்; அல்லதொரு மாயையாகுமென மதித்து, அந்நகரிலும் சூழ்ந்துள்ள நாடுமுழுதிலுமுள்ள உணவுப்பொருளெல்லாமிந்த நிமிஷமே வருகவென்று பற்பல தூதரையனுப்பினான். உடனே அங்குள்ளார் யாவரும் அன்ன முதலியனவும் அரிசி முதலியனவுங் கொண்டு வந்து மலைமலையாகக் குவித்தனர். அவற்றையெல்லாம் அரசன் காண அந்த நிமிஷமே உண்டருளினர்.

அங்குச் சூழ்ந்து நின்றாரெல்லாம் அதுகண்டளவே மிக நடுங்கி பசி நீங்காவிடில் எம்மையும் விழுங்கி விடுவானென்று பயந்தோடினார்கள். மந்திரிமார்கள், இவன் தேவசிரேஷ்டனோ? அசுரனோ? ராக்ஷதனோ? பூதனோ? வேறோ? மானிடனாயினல் இப்படி யுண்டிலனென்று யோசித்து நின்றார்கள். சனகராஜா, இப்பிராமணன் மதுரையில் நிமலன் கலியாணத்தில் முற்று

முண்டும் பசிதீராத குண்டோதரகணமோ? வடவாமு காக்கினியோ? சிவன் நெற்றிக்கண்ணோ? என்று நினைந்து வருந்தி, இருந்தவெல்லாம் வந்தவெல்லாமுண்டும் இவன் பெரும்பசி நீங்கவில்லையே, இனி இப்பசி நீக்குவாரிப் பூமியிலுமில்லை; பசியின்மை செய்யும் அமுதமுள்ள விண்ணுலகினுமில்லை நாமினிச் செய்யத்தக்க தொன்றுமில்லையாதலால், இவன் விரும்பத்தக்க இனிய மொழிகள் கூறி இவனைப் புறம்போகச்செய்வதெப்படி யென்று யோசித்து, ஐயரே, பிராமணன் பூமியில் வறியவனு மென்று உமக்கு நிறைந்த வுணவுகொடுத்தற்குடன்பட்டுஉள்ள பொருளெல்லாங்கொடுத்துவிட்டேன்; இதனாலேயே பசி நீங்கியிருக்கலாம்; ஒருவாறு இன்னும் சிறிது பசியிருக்குமேல், அதைநீக்க இனிஎன்னிடம் யாதொருபொருளுமில்லை; இன்னுமுள்ள அற்பப் பசியைச் சாமானியரு நீக்கிவிடுவார்கள். அங்குச்செல்லுகஎன்றனர். அது கேட்ட பிராமணர், சனகர் வருந்தும்படி பார்த்து, அரசனே உன்னைத் தானு இந்த நாட்டிலுள்ளார் வள்ளலென்று கூறினர். அச்சொல்லை நம்பி உண்மை வள்ளலென்று பொய்ப்பசி* நீக்கிக்கொள்ள வந்த ஒரே புருடனுகிய எனக்கு மிக அற்பமான உணவு தந்து எரிநெருப்பில் நெய் தூவினாற்போல்,முன் னுள்ள பசியை மேலும் வளரச் செய்தாய், இப்படிப்பட்ட நீ எல்லாப்பொருளுங் கொடுத்துவிட்டேன் இனி உணவு தருவாரிடஞ்செல்க என்று சொல்லி விலகிக்கொண்டாய்; உன் வள்ளற் றன்மை, யுண்மை, கீர்த்தி, யிரக்கம், பெருமையெல்லாமிக அழகு. நல்லது, நீ நானே பிரமம்;எனக்கு மேற் பிரமமில்லை ஈதல், ஏற்றல், எல்லாம் என் வசத்தனவே யென்று உன்னுடையதல்லாத பிரம நலங்களை நீயாகவே வாய்க்கொழுப்பினால் மேற்கொண்ட நீ என் பசி நீக்கிலாய்; உன் பசி பூர்த்தியாக என்னாலே நீக்கமுடியாதென்று கூறியது கபட வார்த்தைபோலும். அஃதெப்படியானாலுமாகட்டும், உன்னிடத்துள்ள பொருளெலாம் போய்விட்டாலும், நீயே பிரமமாயிருக்கும்போது இன்னு மெவ்வளவோ மலைமலையாக உண்டாக்கிக் கொடுக்கலாகாதா? அளவிடப்படாத பல்லாயிரங்கோடி யண்டங்களையும் ஒரு இமையளவின் முன்னே சிருட்டித்துத் திதித்துச் சங்கரிக்கவல்ல ஏக வஸ்துவாகிய பிரமம் நீயானால், என்பசியை நீக்கமுடியாமல் இல்லையென்று சொல்லமாட்டாய்; ஒருவன் பசிநீங்கக் கொடுத்தற்கிடமின்றி என்செய்வோமென்று வருந்துகின்ற நீதானு அரிய பெரிய பிரமமாவாய். இதனை வரும் செய்யுளாற் காண்க. இப்படியே, பின்னுஞ்சில செய்யுள்கள் வருதல் காண்க.

எல்லையில் பொருள்க ளெல்லா மிமைக்குமுன் னுக்கிப் போக்க
வல்லதோர் பிரம நீயேல் வந்தவென் பசியை நீக்கா
தில்லைபோ வென்பை யல்லை யிவதற் கிடமில் லாமல்
அல்லலுற் றிளையு நீயோ வரும்பெரும் பிரம மாவாய். (சசு)

---

*பொய்ப்பசி என்றது, நீ பிரமம் ஒன்று தவிர மற்றெல்லாம் பொய் யென்றே துணிந்தவனல்லவா? அந்தப் பொய்களுள் ஒன்றாகிய பொய்ப் பசியையுங்கூடப் பொய்யாக்க முடியாத நீ, எல்லாம் பொய் யென்பது உன் வாய்ச்சொல் லளவேயன்றி உண்மையல்லவென்னுங் குறிப்பு.

நல்லது பிரமலக்ஷண மின்னதென்றறியாமல் நானே பிரமம் என்று மூடபுத்தியா லகந்தைமேற்கொண்ட அரசனே, பிரமமானது சீவகோடிகளுக்குப் பேரின்பத்தைக் கொடுப்பதேயன்றித் தனக்குக்கிடைக்கப்பெறாத ஒரு இன்பமுள்ளதாக அதனைப்பெறுதற்கு விரும்புமா? அது கிடைத்தற்கென்று முயற்சிக்குமா? முயலும்போது கிடைக்கப் பெறாமல் இடையிலே துன்பங்கள்வந்து வருத்த நீக்கிக்கொள்ளமுடியாமல் வருந்தி மயங்குமா? இத்தனையு முன்னிடத் திருக்கின்றனவே. இவற்றை நீ யறியவில்லையா? அங்ஙனமாகவும் நானே பிரமம் மற்றெல்லாம் பொய்யென்று உன் வூத்தை வாயினாற் கூறுவதென்னே? அறிவில்லாதவனே வேத வேதாந்தங்களும், அவற்றின் சாரமாகிய சிவாகமாதி சிவசாஸ்திரங்களும், உலகத்திலே அன்புடன் செய்யப்படுகின்ற செயல்களும், அவற்றைச் செய்கின்ற சீவர்களும், அவற்றிற்குரிய பிரயோசனங்களும், அவற்றையறிந்து கொடுக்கின்ற பரமபதியுமுண்டென்றே கூறுகின்றன* அப்படியிருக்க நீ அவை யெல்லாம் பொய்யென்றும் நானே பிரமமென்றுங் கூறுகின்றாய்; மூடனே உன் பிரமத்தை நெருப்பிலிட்டுப் பொசுக்கி விடு என்று கூறிவிட்டுச் சென்றருளினர்.+

இன்பமே விழைந்தும் வேட்ட தெய்தவே முயன்று மூடே
துன்பமே விடவல் லாந்து துளங்குமோ பிரமம் வேத
மன்புறு மொழுக்கஞ் செய்வோ னதன்பய னளிப்போன் கூறு
நின்பிர மத்தை மன்ன நெருப்பிடா யென்று நீத்தான். (சஎ)

பின்பு சனகர், அச்செயல்களினருமையை நோக்கி, இப்பிராமணன் மகாதேவனாகவே யிருக்க வேண்டும்; இவன் செய்த செயலும் தெய்வத்தன்மையே காட்டியது; இவன் கூறிய மொழிகளும், நாம் கொண்ட அகம் பிரமக் கொள்கை பெரும் பாதகத்துக் கிடமே யென்பதை விளக்கி, நாம் பிரமமல்ல, நமக்கு மேலொரு ஆண்டவனுண்டு, நாம் எப்போதும் அடிமைகளே யெனக்கொண்டு தொண்டுசெய்வதே செம்மையான மார்க்கமென்று தெளி

---

*இதனை, "செய்வினையுஞ் செய்வானுமதன்பயனுஞ்சேர்ப்பானு, மெய்வகையானான் காகும் விதித்த பொருள்." என்ற ஸ்ரீமத் நடராஜ திருவருட் சுருதியாகிய பெரிய புராணத்தாலுங் காண்க.

+இவ்வாறு விநாயகப்பெருமானாகிய பிராமணர், சனகர் பிரமமல்லாத சீவனாகிய தம்மையே பிரமமாகக் கூறியபடியால், அந்தச் சீவனையே ஈண்டு நின்பிரமத்தை நெருப்பிலிடு என்று கூறியருளினர், ஆணவமலக்கொடுமையால் நானே பிரமமென்று முனைத்தெழுகின்ற சீவத்துவத்தை ஞானக்கினியினாற் பொசுக்கவேண்டிய தவசியமாதலால் அங்ஙனங்கூறியருளினரென்க அதுவே வாசக தீக்கைபோலாகி சனகர் முன்கொண்ட அகம் பிரமத்துவத்தை நீக்குமுபதேசமுமாயிற்றென்க.

விக்கின்றது. ஆகா, இவனை, இன்னானென்றுண்மை தெளிவதோ அரிதாயிருக்கின்றது; இதற்கு யாது செய்வோமென வருந்தி, நாமே பிரமமெனக் கொண்ட வழியில் முழுச் சந்தேகியாய், மிக வெட்கமுற்றுத் துக்கத்துடன் யோசித்துக் கொண்டிருந்தார்.

அரச மாளிகை நின்றும் வெளிவந்த விநாயகப் பெருமானாகிய பிராமணர், அம்மிதுலாபுரியிற்கணேச பக்தியேயுருக்கொண்டதிரிசிரசு விரோசனை யென்னும் தம்பதிகளுடைய திருமாளிகையிற் சென்றருளினார். அவர்களோ, மிகுந்த வறியர்களாய்ப்பிக்ஷை யெடுத்து வயிறு வளர்த்து வருகின்றார்கள்; அங்ஙனமாகவும்; யாதொரு கவலையுமின்றிக் கணேசபூசனையே எப்போதும் அழிவில்லாத நித்தியப் பெருஞ் செல்வமெனக் கொண்டு நித்தியானந்தானுபூதிமான்களாய் வாழுகின்றவர்கள்† கணேசப் பிராமணர், அங்குவந்தருளிய சமயம், விரோசனையாராகிய தர்ம பத்தினியார் பக்கத்தே நின்றேவல் செய்யக், கணேச பூசனைத் திருத்தொண்டு செய்துகொண்டிருந்த திரிசிரசென்னும் பிராமணர், உடனே எழுந்து விரைந்து வந்து பன்முறை வணங்கினார். கணேசர், அவரைநோக்கிப், பெருஞ்செல்வனாகிய சனகனிடஞ்சென்றேன். மிகுந்த எனதுபசியில் ஒருசிறிது நீக்கினான்; அப்பசி முழுது நீக்கிக்கொள்ளும்படி யுன்னிடம் வந்தேனென்றருளினர். அதுகேட்டு விரோசனை அம்மையார், வணங்கி யெழுந்து நின்று, சுவாமிகளே, பெரிய குளத்திலுள்ள நீர் முழுதுங்குடித்தும் நீங்காத பெருந்தாகமானது, நிறைக்குந்தோறும் ஒழுகிப்போகின்ற ஒட்டையுள்ள ஒருசிறிய கலயத்தின்நீரால் நீங்குவதுண்டோ? அடியேங்களோ, நேற்றுவரை பிச்சையேற்றுக் கிடைத்ததைக்கொண்டு வந்தோம், இன்று ஒன்றுங்கிடைத்திலது; விநாயகபூசனை செய்தது ஒரு அறுகுதான் மிஞ்சியிருந்தது; உணவுக்குரிய வேறொன்றுமில்லை; தங்களையும் ஓர் பொருளாத்திருவுளங் கொண்டு எழுந்தருளிய தேவரீரது பசியைநீக்கி உய்யும் பாக்கியம்பெறக்கிடையாத பாவியேம் யாதுசெய்வோமென்று பணிந்தனர். அவர் கூறிய உண்மையும் பேரன்பும் திருவுளங்கொண்டு பெருமகிழ்வுற்ற விநாயகப் பெருமான், பெருஞ்செல்வராயினும் அன்பின்றிக் கொடுக்கும் பல்கோடி பொருளைக் காட்டிலும், யாதுமில்லாதவராயினும் அன்புடன் எள்ளளவு கொடுத்தாலும் அதுவே மிகப்பெரும் பிரயோசனமாகும். அன்புடையாரிடத்தில் ஏற்பதே ஏற்பவர்க்கும் கீர்த்தியுமாகும். ஆதலால், உணவுக்குரியதல்லாத ஒரு சிறு அறுகம்புல்லை நாம் கொடுப்பது பொருத்தமில்லையே என்றெண்ணாதே; அதுவே நமது பெரும்பாக்கியமாகும்; கூசாமல் அன்புடன் அப் புல்லையே நமக்குக் கொடுப்பா யென்றருளினர்; உடனே

---

† இத்துணைச்சிறந்த இவர்கள் வறியராயிருக்கவும் இவர்கட்குப்பெருஞ் செல்வங்கொடுத் துபசரியாதிருத்தற்குக் காரணம்: சனகர் நாமேபிரமமென்கின்ற அகந்தையாலும் சீவர்களென்பது பொய்யெனக் கொண்டமையாலும் வந்த இரக்கமின்மையே யாமென்க.

விரோசனையம்மையார் அவ்வறுகம்புல்லை யெடுத்துவந்திருகையாலுநீட்டினு ர்; அதனை யெம்பெருமான் வாங்கித் திருவாயிலிட்டுண்டு, தமது பசி முழு து நீங்கின குறிப்புத் தமது திருமுக முதலிய திருமேனித் தெளிவினாலுங் காட்டிப், பரிபூரணபோசன மென்று தெரிதற்குரிய ஏப்பமுஞ் செய்தருளி னூர். அவர் அவ்வறுகைவாங்கித் திருவாயிலிட்டருளியபோதே அவ்விருவரு மிருந்து வந்த சீர்ணமான பழங்கூரை, சொர்னரத்தினநிதிகளாலாகிய பெருந் திருமாளிகையாகி, எங்குஞ் சொர்னரத்தினநிதி தானியாநி சகலசெல்வங்களு நிறைந்தன. அந்நகரெங்கும் நாடெங்கும் பெருஞ் செல்வங்கள் நிறைந்தன. எல்லாரும் இஃதென்ன அற்புதமென்று பெருமகிழ்வுற்றூர்கள். திரிசிரசும் விரோசனையம்மையாரும் இவையெல்லாங்கண்டு திருவருளெனத்தெளிந்து வறுமை யெல்லாம் நீங்கினூர்கள், விநாயகப் பெருமான், மழுவும், தாமரைப் பூவும், மாலையும், ஒரு கொம்புந்தாங்கிய நான்கு திருக்கரங்களும், ரத்ன கிரீ டமணிந்த சிரசும், குண்டலம், கங்கணம், அங்கதம், முந்நூல், வேதச்சிலம்பு அணிந்த கரசரணாதிகளும் விளங்கும் திருவருட்டிருமேனி காட்டி எதிர்நின் றருளினூர். இவ்விருவரும் பரவசராய் ஆனந்த சாகரத்தின் மூழ்கிநின்று, தி ருவடிகளிலே மணமிகுந்த மலர்கள் தூவிப் பன்முறை வணங்கித் துதித்து, எம்பெருமானே, எண்ணரிய பிறவிதோறுஞ் செய்த தவங்களாலும் கிடைக் ப்பெறுத, உமது திருவருளை அடியேங்கள் மிக எளிதாகப் பெற்றுக்கொ ண்டோம். பிரபஞ்ச வாழ்வை வேண்டிலேம்' திருவடி நீழலில் இரண்டறச் சேர்ந்திருக்குஞ் சுத்தாத்துவிதானந்தப் பெருவாழ்வே தந்தருள்க என்றுவே டிக்கொண்டார்கள். எம்பெருமான், அதனைத்திருச்செவி சாத்தியருளி, அன் பர்களே, உங்களுக்கு நாமிப்போது தந்த பெரும் பொருள்களெல்லாம் அனு பவித்து நமது திருவடியடைவீர்களென்று அருள் செய்து நின்றருளும்போ து, சனகர், தமது அரண்மனையெங்கும் நகரெங்கும் நாடெங்கும் செல்வங்க ள் நிறைந்திருத்தலை நோக்கி, ஆகா நம்மிடத்துப் பசியென்றுணவு‡ வேண்டி வந்த பிராமணன் பரமேசுரனே யென்று தெளிந்து, தேடிச்சென்று, திரிசி ரசு திருமாளிகையடுத்து,விநாயகப்பெருமானுடைய திருவுருவங்காணப் பெ ற்றூர். உடனே நானே பிரமமென் றிறுகப்பற்றிய அகந்தை முழுதும் அடி யோடொழியப்பெற்று, ஊற்றிருந் தெழுகின்ற பேரன்பினாலுள்ள நெகிழ் ந்துருக, உரோமஞ் சிலிர்ப்பக், கண்கணீரொழுக, நடுநடுக்குற்று, ஸ்ரீபாதங் களிற்றண்டாகாரமாய் வீழ்ந்து பன்முறை பணிந்தெழுந்து அஞ்சலியஸ்த ராய்த் திருமுன்றுநிற்கின்றூர். நானே பிரமமென்றிறுமாந் தெழுந்து செரு க்குதலைச் செய்கின்ற இந்தப் பெருங் கொடுமையே, முன்னெல்லாமும் எ னக்குண்மை ஞானம்போலத் தோன்றி, என்னைத் தன்வசப்படுத்தி, உண் மையான சிவஞானந் தோன்றவிடாது மறைத்து அடர்ந்தெழுந்து நின்றது;

‡ விநாயகர், சனகரிட முணவு வேண்டினர்போல வந்தாண்டது. அச் சனகர் நானே பிரமமென் றிறுமாந்து அகந்தை கொள்ளும்படி செய்த சிவ போதத்தையே யாகலின் அவர் பின்பு தெளிவுறப்பெற்றூரென்க.

அந்த அஞ்ஞானப்பெருவலியினாலே, எய்பெருமானே ஒன்றுக்கும் பற்றாத புழுத்தநாயினுங்கடைப்பட்ட மும்மலப்பசுவாகிய சிறியேன், இனிமேலும் நான் பிரமமென்றே சிந்தித்துத்தருக்கி மீளா நரகத்துக்கேதுவாகிய பிறவிக் கடலில்வீழ்ந்து அலையாமற் கரைசேர்க்கு மார்க்கமிதுவேயென்று, சுத்தாத் துவித சைவ சித்தாந்த சன்மார்க்கங்காட்டியருளிய நிர்மலனே நினது திரு வருளுக்கு நமஸ்காரம்.

அறிவுபோ லடர்ந்தெ ழுந்த வறியாமைப் பெருவலியாற்
சிறியனே னகம்பிரமஞ் சிந்தித்து மிகத்தருக்கி
மறியுமா பவக்கடலின் மறியாமைக் கரைசேர்க்கு
நெறியிதா மெனக்காட்டு நின்மலநின் னருள்போற்றி. (௬௩)

நாரதமுனிவர் வந்து, என்னிடத்தில் மற்ற குணங்களெல்லாமிருந்தும் அவற்றையெல்லாம் அடியோ டழித்துத் தொலைக்கின்ற பெருங் கேடாகிய நானே பிரமமென்னுங் கொடுமையால் இறுமாந்து, பெரியோரை மதியாதி ருந்த பெருங்குற்றம் தீரும்படி, எனக்கு நன்மையாகவே கூறிய நன்மொழி களைப் பொருட்படுத்தாமல், அவமதித்துத் தள்ளிய பெரும் பாதகனாகிய நா னும், அகம் பிரமப் படுகுழியினின்று கரையேறும்படி, பிறரெவராலும் வெ ல்லமுடியாத வலிய அந்தகாசுரனாகிய யானையை யுரித்துப் போர்த்த வீரனு க்கும் திரிபுரங்கடக்கும்படி வரங்கொடுத்த வீரனாகிய§ நீயே இங்குவந்தருளிய திருவருளுக்கு நமஸ்காரம்.

நாரதமா முனிவந்து நவைதீர வுரைத்திட்ட
சீர்தரும மதியாத சிறியேனுங் கரைசேர
வாரதளை யணிந்தபிரான் மதில்கடப்ப வரங்கொடுத்த
வீரதய வாலிங்கு மேவியநின் னருள்போற்றி. (௬௪)

அடியேன் மட்டிலமையாது, அடியேன்சுற்றங்களும், அளவிலாத பெ ரும் பொருள்களும், இந்நகரத்தாரும் அவர்பொருள்களும் நாட்டாரும் அவர் பொருள்களும் நிர்மலமாகித் திருவடி சேரும்படி திருவுளங்கொண்டருளிய திருவருளுக்கு நமஸ்காரம்.

அடியனே னளவன்றி யடியனேன் பெருங்கிளையும்
படியிலா நெடும்பொருளும் பதியவரு மவர்பொருளு
நெடியநீர்க் குளிர்நாடு நின்மலமாய் நினதுதிரு
முடிவிலாப் பதஞ்சேர முன்னிநினைநின் னருள்போற்றி. (௬௫)

மாலயனறியாற்றேடியுமறியாத தேவரீருடைய பிதாவாகிய சிவபிரா னிடத்து, மார்க்கண்டர்பொருட்டு மாறுபட்ட மனத்துடன் எதிர்த்து வந்த யமன் அருள்பெற்றதுபோல, அடியேனும் அகங்காரமயக்கத்தால் உண்மை

---

§ வேறெவராலு மாற்றமுடியாது சிவஞானச் செல்வ மகரிஷியாகிய நாரதராலு மாற்ற முடியாத மிகு வலிபெற்றிருந்த தமது அகந்தையை மாற் றியபடியால் அரி பிரமாதியர்களாலுங் கடக்கமுடியாத புரங்கடந்த வீரனுக் கும் வலிகொடுத்த வீரனென்ற கூறினாரென்க.

யுணரமாட்டாமல் நானே பிரமமென்று மாறுபட்ட பொருள்கொண்டு என க்குமேற் பிரமமில்லையென் றெதிரியாயிருந்தும், திருவடியைச் சமீபிக்கப் பெற்றேன். முன்னுள்ள நானே பிரமமென் றெழும்படி மயக்கும் அகம்பிரம அசுத்தஞான மினிபொருக்கால் வாசனைவசத்தால் எனக்குவராமல் அதிபரிசுத்தமாகிய சுத்தாத்துவித சைவ சித்தாந்த ஞானத்தை அடியேன் தெளியும்படி உபதேசித்தருளுக என்று வேண்டிக்கொண்டனர்.

துருவியுநா ரணனறியாச் சுடர்மலர்த்தா ளுந்தையிடைத்
திருகுமனத் தொடுமெதிர்ந்து தென்றிசைக்கோன் பெற்றதுபோற்
பொருள்பிறழக் கொண்டுனைதா பூங்கழல்பெற் றேனினிநின்
னிருமலஞா னந்தெளிய நிகழ்த்துகென விரந்திட்டான். (௬௬)

சனகரோவென்றால், நாளடைவிலே தேகேந்திரியாந்தக்கரணாதி தத்துவங்களை யாராய்ந்தவற்றின் செயலெலாஞ் செவ்வே தெரிந்துவருங்கால் அவைகள் சடப்பொருள்களென்பதும், தாம் சித்தென்பதும் உணர்ந்த மாத்திரையே, அச்சடங்கள் நானல்லவென்று கழித்துத், தம்மைச் சித்தேயெனத் தெளியக்கண்டுகொண்டவராதலால், இவர் சடமாகிய தத்துவரூப தெரிசனஞ்செய்து, சித்தாகிய ஆன்மரூப தெரிசனத்தால், தத்துவ சுத்தி விளக்கம் பெற்றவ ராயிருந்தும், ஆன்மாவாகிய தம்மைச் சித்தெனக் கண்டளவிலே, தாம் கிஞ்சிஞ்ஞ‡சித்தேயென்னு முண்மை நோக்குதற் கிடந்தராத ஆணவ மறைப்பால் தாமே சர்வஞ்ஞ சித்தாகிய பிரமமெனக் கொண்ட அகந்தை வயத்தராய் நின்று, அகங்காராதி தத்துவத்தினகப்பட்டு, முன்கொண்ட தத்துவ சுத்தி விளக்கமும் ஒழிந்து, தாம் பசுவேயென்பது மின்றி உயிரிழந்தவர்போல நின்ற நிலை முழுது நீக்கி, இப்பொழுது நான் பசுவே, பசு பதி, கணேசனேயெனத்தெளிந்து பணிந்து துதித்து வேண்டினராதலாற்,கணேசப்பெருமான், அச்சனகரிடத்தே,உயிர்பிறந்த நிலைமையை நோக்கி யாதொருசந்தேகமுமின்றி உண்மைப்பொருளே விளக்குகின்ற சிவாகம விதிப்படி சிவதீக்ஷை செய்து, பாலின் நெய்போல மறைத்து விளக்குதலின்றித் தயிரின் நெய்போல வெளியாய் விளக்கியுபதேசித்தருளுகின்றார்.

செயிர்படுதத் துவசுத்தி திகழ்ந்தொழியச் சனகன்†பால்
உயிர்பிறந்த நிலைநோக்கி யொருமருப்புக் களிற்றுமுகன்
அயிர்பிறவா வாகமத்தி னருள்வழிதீக் கையும்புரிந்து
தயிர்படுநெய் யெனக்கொள்ளத் தக்கமுறை யாலருள்வான். (௬௭)

வாராய் சனகனே, வேதவேதாந்த சிவாகமசித்தாந்தாதி சகலசாஸ்திரங்களாலும், அநாதி நித்தியப்பொருள்களென்று கூறப்படுவன பதி, பசு, பாசமென்கின்ற மூன்றுமாகும். அம்மூன்றிற் பதியாவது, அப்பசு பாசமிரண்டிற்கு மேலானதாய், ஒன்றேயாய்ச், சர்வ வியாபகியாய், முக்குணரகித சர்வஞ்

‡ கிஞ்சிஞ்ஞதை—அற்ப அறிவு. சர்வஞ்ஞதை—பேரறிவு.

† திகழ்ந்து, ஒழி, அச்சனகன் எனப்பிரிக்குக.

ளுதாதி அஷ்டமங்கள திவ்விய குணத்ததாய், ஆன்மாக்களைப் பந்தித்த மூல மல நீங்கவே பந்தமும் வீடுந் தருவதாயுள்ளதாகும். அத்தகைய பதி யாதோ வென்று மயங்காதே, இப்பொழுது உனக்கருளும்படி வந்தெதிர் நிற்கின்ற நாமேயென் றுணர்வாயாக.

பதிபசு பாச மென்னப் படும்பொருண் மூன்ற வற்றுட்
பதியிரு பொருளின் மேலாய்ப் படர்ந்தபே ரறிவா யாவி
பதிமல மூல நீங்கப் பந்தமும் வீடு நல்கும்
பதியிது யாதென் றெண்ணல் படர்ந்தனக் கருளு நாமே. (கஅ)

இனிப் பசுவோ வென்றால், எண்ணில்லாததாய், என்றுமுள்ளதாய், அநாதியே மல பந்த முள்ளதாய், நம்மாலே கர்மானுபவ தேகங்களிற் புகுந்து, சார்ந்த தன் வண்ணமாய் நின்று வினைகளைச்செய்து, மேலான சிவபுண்ணியங்களாகியசரியை, கிரியா யோகங்களைச் செய்து, சிவஞான வலியினால் நம்மையிரண்டறப் புணர்ந்து நித்திய சிவானந்த வாழ்வைப் பெறுவதாகும்.

எண்ணரி தாகி யென்று முள்ளதா யிருளி னன்றே
நண்ணிய தாகி நம்மா னலத்தகு தேகத் தெய்திக்
கண்ணது வதுவாய்ச் சார்ந்து கருமங்க ளாற்றி மேலாம்
புண்ணிய வலியா னம்மைப் புணர்வது பசுவென் றோர்தி. (கக)

சர்வ சுதந்திர பதியாகிய நாம் அறிவித்தா லன்றித் தாமாக அறியமாட்டாத பரதந்திர சிவான்மாக்கள், நம்மாலுணர்த்தப்பெறுகின்ற சிவஞானத்தாலன்றி, நானே பிரமமென்றெழுகின்ற பசுஞானத்தாற் பதியாகிய நம்மையணுகமாட்டா. அங்ஙனஞ் சிவஞானம் நிகழ வொட்டாமற் செம்பிற் களிம்பு போல அவ் வான்மாக்களிடத்து அநாதியே செறிவுற்று மறைத்து நின்று, அஞ்ஞானத்தையே என்றும் தெரிவிக்குமியல்பினது ஆணவமலம், இதுதத்தங்கால எல்லையினீங்குவனவாகிய அனேக சத்திகளையுடையது. இந்த மூல மலத்துடன், ஆன்மாக்களுக்குக் குறிக்கப்பெற்ற தனு கரண புவன போகங்களைக்கொடுக்கின்ற முத்திறப்படு மாயா மலமும், ஆன்மாக்களா லீட்டப்படுகின்ற புண்ணிய பாவாதி பலதிறத்தனவாய கர்ம மலமுங்கூடி மூன்றாகி நின்று, அவ்வான்மாக்கள் சோபானக் கிரமமாகச் சென்று நிற்கும் சன்மார்க்க நிலைநோக்கி நமதருளால் நீக்கப்படுவதே பாசமாகும்.

அறிவித்தா லறியு மாவி யதினன்றிப் பதியிற் சாரா
செறிவுற்றஞ் ஞான மென்றுந் தெரிக்குமா ணவத்தி னோடு
குறிபெற்ற மாயை கன்மங் கூடிமூன் றாகி நின்று
நெறியுற்றெம் மருளா னீக்கப் படுவது நீண் டபாசம். (எ0)

இதுகாறுங் கூறியவாற்றால், பதி அநாதி மலமுத்தனே; பசு அநாதி மலபெத்தனே; மலம் அப்பதியினருளால் ஆன்ம பரிபாக நோக்கி அதன் சத்தி நீக்கப் படுவதென்னு முண்மை விளங்குதலாற் சனகனே நீ, அநாதி மலபெத்த பசுவாகிய உன்னை அநாதிமல முத்த பதியாகிய பிரம மெனக்

கொண்டது பெருந் துரோகமே யாகும்.‡ உன்னுள்ளே அந்தரியாமியாகிய அப்பிரமம் உனக்கறிவித்தபோதே அதனுடன் இயைந்து நின்றறியும் பசுவே நீ, இதுவே யுண்மை; முன்னெல்லாம் நீயல்லாத தேகேந்திரியாதிகளையே நீயாக மயங்கி நின்று, பின்பு அவை யெல்லாம் சடங்களே யென்பது தெரிந்த உடனே, அவற்றின் வேறாகிய சித்தே நீ யென்றுன்னைக் கண்டாயல்லவா? அதுபோல அதன்மேல் நாம் சித்பொருளேயானால், இருந்தபடி இருந்தே ஏககாலத்திலேயே எல்லாவற்றையும் நாமாகவே அறியவேண்டுமே? அப்படியின்றி ஒருவர் அறிவித்த பின்னரே அதுவும் ஒன்றொன்றாகவே அறிகின்றோமாதலால், நாம் அறியுந்தன்மையினாலே சித்தானாலுங், கிஞ்சிஞ்ஞசித்தே யன்றி வேறில்லை; நம்முள்ளே நின்று நமக்குணர்த்துவதோர் சர்வஞ்ஞ சித்துண்டு; அதுவே பிரமமென்று ணரலாம். அவ்வுணர்வும் உனக்குப் பரிபாக காலம் வந்தாலன்றித் தோன்றாது; அது தோன்றாதபோது சர்வவியாபக பதியினிடத்து, நாம் வியாப்பியமாயடங்கியிருக்கும் ஆன்மாவே யென்று உன்னைக்காணமாட்டா யாதலால், நான் பிரமமென்னுஞ் செருக்கொழிந்து அடங்கி நின்று திருவருளை வேண்டி நின்று வழிபட்டுக்காண்க.

ஆகையாற் பிரம நீயோ வல்லையப் பிரம நின்னுள்
ஏகமா யறிவித் தக்கா லியைந்தறி யாவி யாவை
தேகநீ யானாய் பின்பு தெரிந்துவே றுனைக்கண் டாற்போற்
பாகமார் காலத் தன்றிப் பதியிடை நின்னைக் காணாய். (எக)

சனகனே, இனிநீ நானே பிரமமென்று கூறமாட்டாய்; ஒருக்கால்நீடித்த பழக்கத்தால், நீயே பிரமமென்னும் நினைவுதிக்குமேல், அப்போதுநாம் பிரமமானால் இந்திரியாதிகளை யியைந்து வலிய சாக்கிராதி யவஸ்தைகளையடைந்து மயங்குவதென்னே? மறைவில்லாமல்அனுபவத்துவருகின்ற வினைப்போகங்கள் நாம் நினைத்த நினைத்தபடி நமக்குக் கிட்டாத காரணமென்னே? இக்குறைவெல்லாம் சுத்தப்பிரமத்துக் கில்லையே; ஆதலால், அஞ்ஞானம் விரவுதலால் நாமே பிரமமென்றோர்ந்ததும் பொய்யே; மறவி மயக்கமே யாகுமென்றுணர்ந்துண்மை விளைவை நீயே விளம்பி அந்நினைவையுடனே மாற்றவேண்டும்.

பிரமநீ யென்னை யாகிற் பேறுறும் வாயி லேற்றங்
குரவுசீர்ச் சாக்கி ராதி யவத்தைக ளுறுவ தென்னே
கரவிலா வினைப்போ கங்கள் கருதியாங் குறாமை சொல்லாய்
விரவியோர்ந் ததும்பொச் சாகும் விளைவுநீ விளம்பல் வேண்டும். (எஉ)

---

‡ பிரமத்துவ மென்னும் பெருஞ்சொத்து அப்பிரமத்துக்கே யுரியது, அதனை, அஃதில்லாத ஏழை நானென்று பணிந்து சிவாகமவிதிப்படி சரியை கிரியாதிகளின் நின்றொழுகிச் சிவஞான வாயிலாகத் திருவருளாற் பெறுவதன்றி, அச்சொத்து என்னுடையதே நானே பிரமமென்றிறுமாப்பது அதனைத் திருடிய சிவத்துரோகமே யாதலாற் பெருந்துரோகமென்றார். திருடாவிட்டாலும், நினைத்தலுந் திருட்டேயாகுமென்க. சன்மார்க்கவழி நின்று தாழ்ந்து பெருமியல்பை மறந்து, துன்மார்க்கமாக நினைத்து எத்தனைபாடு பட்டாலும் அச்சொத்துத் திருட்டுக்கு அகப்படாது; மேலுமேலுந் துன்பமே விளைக்குமென்க.

சனகனே நீ,முன்பு ஆணவமலத்தில் வேறற்றுத்தங்கியிருந்ததுபோல், இனிமேல் நமது திருவருளினாலே நம்முடன் சேர்ந்து சோகம்பாவனா சுத்தாத்துவித நித்தியானந்தமயமாய் நம்மில் வேறென்பதின்றிச் சிவானுபூதிப் பெருஞ்செல்வனாய் வாழக்கடவாயென்று திருவாய்மலர்ந்தருளி, அவனுக்கு அவையெல்லாந் தெளிவாகும்படி, மிக மேலாகிய திருவடி ஞான விளக்கங் கொடுத்தருளி மறைந்தருளினார்.

இனியெய தருளின் வேறற் றேகமாய்ப் பாவமாகிப்
புனிதவத் துவித மாகிப் புணர்சுக மயமாய் முன்பு
தனிமல வாண வத்திற் றங்கியாங் கிருக்க வென்று
நனியருண் ஞான நல்கி நம்பிரான் மறைந்துபோனான். (எந)

விநாயகப் பெருமானிவ்வா றுபதேசித்தருளக் கேட்டுக்கொண்ட எல்லாவற்றையுஞ் சிந்தித்து நோக்கி உண்மையெனத் தெளிந்து, சிவத்துடனிரண்டறக்கலந்து சிவானந்தமுறுதலாகிய நிஷ்டை கூடப்பெற்ற சனகர், இந்தப் பெருவாழ்வு நாரதமுனிவரே தந்தாரென்று அவரை நினைந்து நினைந்துள்ளமுருகி, உருவத்துட னிங்கிருந்து வாழ்கின்ற சீவன்முத்தரென்றுலகெலாங் கொண்டாடும்படி அரசுபுரிந்திருந்து வாழ்ந்தார்.

தெருளுறக் கேட்ட வெல்லாஞ் சிந்தித்துத் தெளிந்து நிட்டை
மருவிய சனக னிந்த வாழ்வுநா ரதன்றந் தானென்
றுருகியம் முனியை யுன்னி யுருவரு ஞானி யென்ன
விருநிலம் புரந்து சீவன் முத்தனா யிருந்தா னன்றே. (எச)

இவரை ஞானசனகரென்றுலகர் கூறுவது, விநாயகப் பெருமானிடத்துண்மை ஞானோபதேசம் பெற்றபின்பே யென்பதினாற் றெளிவாய் விளங்குகின்றது. இவரை ஞானசனரெனச் சிரமேற்கொண்டு பாராட்டுகின்ற அகம்பிரமவாதிகள், இவர் விநாயகர் அருள்பெற்றுச் சிரமேற்கொண்ட சுத்தாத்துவித சித்தாந்த சைவ நிலையைப்பற்றிச், சிவசாயுச்சியம் பெற்றுச், சரியை, கிரியாயோக ஞானானுஷ்டானிக ளாகாமல், இச்சனகர், நாம் பிரமமென்னு மார்க்கஞ் சிவத்துரோகமே தந்ததென்று பயந்து நீங்கி வாந்தித்துத் தள்ளிய அகம்பிரம மார்க்கத்தையே உண்மையெனச் சிரமேற்கொண்டொழுகுவதென்னையோ?

சனகரோ, தேகேந்திரியாதிகளையே நானென்கின்ற சர்வபாச நிலையினீங்கி, அவையெல்லாஞ் சடங்களென்றுள்ள படிகண்டு, அவற்றிற்கு விலகணராகி, அதன்மேற் சித்தாகியதம்மைக் கண்டு, அதற்குமேல் நோக்குஞ் சிவஞானங்கிடைக்கப் பெறாமையால், அங்ஙனங்கண்ட மட்டிலேயே கிஞ்சிஞ்ஞ சித்தாகிய, தம்மையே சர்வஞ்ஞ சித்தாகிய பிரமமெனக் கொண்டவர். கொண்டாலும் பெரும்பாலும் பாசவிலகணராயே நின்றனர். இந்தநிலையின் நிற்கின்ற பசுஞானிகளை நோக்கியே, இவர்களிருக்கும் பக்கத்திலுஞ் செல்லாதே யென்று தமதுள்ளத்துக் குபதேசித் தருளினார். கொற்றங் குடியடிகள் இவரோ, ஸ்ரீமந் நடேசப் பெருமானால் முத்திச் சீட்டளிப்பப் பெற்று

அப்படியே பெற்றான் சாம்பானுக்கு முத்தி கொடுத் தருளிய உமாபதி சிவா சாரியர். "தாம்பிரமங்கண் டவர்போற்றம்மைக் கண்டாங்கதுவே, நாம் பிரம மென்பவர் பானண்ணுதே." என்பதே அப்பாசுரம். இன்னும் "மாயாவாதப் பேயாவுனக்குத், தேவரி லொருவருண்டாக, மேவருநரகம் விடுத்தலோவரிதே" என்றுங் கூறியருளினர். இக்காலத்திற்சிலர், இதேநிலையராயிருந்தும் நாங்கள் மாயாவாதிகளல்ல வேதாந்திகளென் றுசொல்லிக்கொள்ளுகிறார்கள். அது, காராட்டை வெள்ளாடென்பது போன்ற போலிவழக்கமே. வேதாந்த மென்பது வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களே. அவைகளெல்லாம்பதி பசுபாசங்கள் அநாதி நித்தியங்களென்றே கூறுகின்றன. சில உபநிடதங்கள் சீவன் ஈசுரன் செகத்தெல்லாம் பொய்யென்று கூறுகின்றனவென்று அவர்கள். கூறுகின்றார்கள். அவ்வுபநிடதங்கள் சிலவே. பொய்யென்று கூறுவதுங் கருத்துவேறு. பிரயோசனமில்லாத பிரபஞ் சாதிகளையே இறுகப் பற்றி நிற்குஞ் சீவர்கள், அப்பற்றுமுழுது நீங்கிச் சிவத்தையே பற்றி நின்றுய்தற்காகவே கூறியதன்றி வேறில்லை. சிலஉபநிடதங்கள் காரணம்பற்றிப் பொய்யென்பதையே நிச்சயமாக் கொண்டு, எல்லாம் பொய்யே பிரமமொன்றே மெய் நாமே அப்பிரமமென்று கூறிப்பிரமசொத்தைத் திருட நினைத்துச் சிவத் துரோகமே கொண்டலைபாமல், சுவேதாச் சுவதரம், சாபாலம், பிருகத் சாபாலம், ஈசாவாசியம், முண்டகம், கைவலியம் பிருகதா ரணியம், கடவல்லி, கேனமுதலிய அநேக உபநிடதங்களாகிய வேதாந்தங்கள் பதிபசுபாசங்கள் அநாதி நித்தியங்க ளென்றே கூறுதலை என் உண்மை யென்று மேற்கொள்ளப்படாது. பொய்யென்னு முபநிடதங்கள் சிலவே, அதுவுங்காரணம் பற்றியே, மெய்யென்னு முபநிடதங்கள் பற்பல; இவ்விருவகை வேதாந்தங்களிற் கொள்ளத்தக்கன எவை யென்பது சிறுவருக்கும் விளக்கமாகும் விரிப்பானேன்.

இனிச் சனகர்போன்ற பாசவிலக்ஷணர்கள் பக்கத்திலுஞ் செல்லாதே யென்று உமாபதி சிவங்கூறுமாறுல், ஒரு பற்றையேனும் விட்டுவிலகாமல் உண்டுடுத்துறங்கிக் களித்துச், சிறிது நோய் வந்தால் வருந்தி வயித்தியாதிகள் மிகுந்த பரபரப்புடன் செய்து, இதற்கிடையிலே சில நூலாராய்ச்சிகளுஞ் செய்து, அதுவுந்தங்கள் கருத்துக்கிணங்கவே திரித்துப் பொருள்கொண்டு இறுமாந்து திரிகின்றவர்கள் கதியைப்பற்றி நாம்சொல்வானேன். அவர்களிருக்கும் வீதியிலுஞ் செல்லப்படாது போலும். எல்லாம் பொய்யென்றே போராடுகின்ற இவர்கள், உயிர் நீங்கிய, உடம்பை, "நார்த் தொடுத் தீர்க்கிலென் நன்றாய்ந்தடக்கிலென், பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்" என்று நூல்கள் கூறுவதும், திருவள்ளுவர் முதலிய, பெரியோர் காட்டியதுங் கைக்கொள்ளாமல், உயிர்நீங்கிய உடம்பைப் புதைத்துவைப்பதற்குப் பெருந்தொகை செலவிட்டுக் கோயில்களைச் சிவாலயங்களுக்கும், மேலாகச் செய்வித்தலும், தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற சிவஸ்தலங்கள் எத்தனையோ பழுதாகிக் கிடத்தலை எட்டியும் பாராமல், அங்கங் குள்ள சிவா

லயங்களுக்கு மேலாய்ப் பூஜாதிகள் செய்து வருதலும் என்னையோ? இவர்கள் உயிர் (சீவன்) முதலிய எல்லாம் பொய்யேயென்று கூறுவதுண்மையானால், அந்த உயிர்குடியிருந்த ஒன்பது ஓட்டையாய் மலசலாதிகள்ஒழுகுகின்ற பலஆபாசத்துக்கிடமாகிய அவ்வுயிர்நீங்கிய உடம்பைப்பொய்யினும் பொய்யென்று கழியாமல், மெய்யினும் மெய்யென் றிறுகப்பற்றிப் பெருங் கோயில்கள் செய்து அதனுள்ளே சிவ மூர்த்திகளினு மேலாகத் தாபித்துப் பூசித்துக் கொண்டாடுவ தென்னையோ, சில காலஞ்சென்றால் அச் சிவாலயங்கள்மழுங்கி இவைகளே விளங்கிநிற்குமேயென்றஞ்சாமை யென்னையோ? அச்சிவாலயங்களும் சிவ மூர்த்திகளும் எல்லாம் பொய்யே என்ற கருத்தே போலும். இவைகளெல்லாமே பொய்யென்றுகழித்துப்பேசுமிவர்கள் உயிர் நீங்கிய உடம்பை மெய்யே யென்றும் அங்குச் செய்யும் பூசை யாதிகளும் அவைகள் பலன் தருவதும் மெய்யேயென்றும் வழிபாடு செய்து வருவதென்னையோ? ஆனால் இச்செயல்களெல்லாம் விவகாரமே, விவகாரமெல்லாம் பொய்யே, பரமார்த்தமே மெய். பரமார்த்தத்தில் எல்லாம் பொய்யாகவே ஒழியு மென்பராகில், முடிவில் பலனுக்கு வராமல் விவகாரமாய்ப் பொய்யாயொழிகின்ற அப்பூசையாதி செயல்களை இவர்களே செய்வதென்னையோ? நல்லது, இவர்கள் கருத்தின்படி நோக்கினால், பூசையாதி செயல்களைச்செய்யுஞ் சீவனும்பொய் அச்செயல்களும் பொய் அவற்றிற்குப் பலன்கொடுக்கும் ஈசனும் பொய்யென்றே கொள்ளவேண்டும்; அப்படியானால், எல்லாம் ஒழிந்த பிர்மானுபவ ஸ்தானமென்றிவர்கள் மெய்யாக ஒப்புக்கொண்ட பரமார்த்தத்தில் அப்பிர்மானுபவத்தை அனுபவிக்கின்றவர் யார்? அவ்வனுபவத்தைக் கொடுக்கின்றவர் யார்? இருவர் கூடுங் கலப்பிலேயேதான் இன்பானுபவமுண்டென்பதே உலகெலாமுணர்ந்த உண்மை. இதற்கு ஸ்திரீ புருஷரிருவர் சேர்ந்தனுபவிக்குஞ் சிற்றின்பத்தையே உவமையாக வேதாந்தாதி நூலெல்லாங் கூறுதலுங்காண்க. ஒருவர்மாத்திரமா யின்புறுவதெப்படி? இவர்களும் கூடஸ்தன் பிரமம் என்கின்ற இருபொருளுண்டெனக்கொண்டே கூடஸ்தப் பிரம ஐக்கியங் கூறுகின்றார்கள். இதனால் அக்கூடஸ்தன் பசுத்துவநீங்கத்தச் சிவத்துவப் பேறுற்ற சீவான்மாவே யென்பதும், பிரமம் அவனுக்கு இன்பங்கொடுக்கின்ற பரமான்மாவென்பதும் விளக்கமாகின்றது. இனிச் செய்யும் செயலெல்லாம் விவகாரம். அச்செயல்களின்பலனை முடிவில்அனுபவிப்பதே பரமார்த்தமென்பது யாவருக்குஞ் சம்மதமே. விவகாரத்தில்செய்வனவெல்லாம் பொய்யானால், முடிவில் அனுபவமும் பொய்யன்றி மெய்யாகுமா? முடிவில் அனுபவத்துக்கு மோசமாக விவகாரச் செயல்களைப் பொய் யென்பது என்னையோ? ஒருவன் ஒரு பெண்ணை விவாகஞ் செய்துகொள்ளச்செய்யுமுயற்சி சடங்கு முதலிய எல்லாம் விவகாரமே; அதற்குப் பரமார்த்தம் அப்பெண்ணைக் கலந்து அனுபவித்தலேயாகும. ஒருவன் பசியை நீக்கிக்கொள்ளச்செய்யுமுயற்சி சமைத்தல் முதலிய செயல்கள் விவகாரம், அதற்குப் பரமார்த்தம் அதனையுண்டு இளைப்பாறும் அனுபவமேயாகும். ஒருவன்

நிலத்தைச் சீர்திருத்தி நெல்லை விதைத்துச் செய்யும் செயல்கள் வியகாரம் அதற்குப்பரமார்த்தம் முடிவில் அப்பலனைப்பெற்று அனுபவித்தலேயாகும். இவைபோல்வனபல. இச்செயல்களில்லையானால் அந்த அந்த அனுபவம் வாய்ப்பதெப்படி? இது போலச் சீவர்களாகிய கூடஸ்தர்கள் சிவமாகிய பிரமத்தைச் சேர்ந்தனுபவித்ததற்குச் செய்யுஞ் சரியை கிரியாதி செயல்களுமெய்யாயுள்ளனவே, பரமார்த்தானுபவமு மெய்யா யுள்ளதேயென்று கொள்ளும் பொருத்தமிவர்களுக்கு விரோதமாய் விபரீதவினைவைச்செய்வதென்னையோ விரிப்பானேன் நிற்க.

இனி இந்த அகம்பிரமவாதமாகிய நானே பிரமமென்கின்ற ஆபாசவழியினின்று, பின்பு முற்றவப்பயனாலே திருவருள் கிடைக்கப் பெற்றபோது அவ்வழியைச் சிவத்துரோகமார்க்கமென்று தள்ளிவிட்டு, அதிபரிசுத்தமார்க்கமாகிய சுத்தாத்துவித சைவ சித்தாந்த சன்மார்க்கத்தையே அடைந்துய்ந்தவர்களனேகர். முதலில் இச் சனகரையிச் சரித்திரத்தால் யாவருந் தெளியலாம். இனி ஆதி சங்கராசாரியரும் ஆரம்பத்தில் அகம் பிரம மார்க்கத்தினின்று, பின்பு நீலகண்ட சிவாசாரியராற் றெளிந்து சிவதீக்ஷை பெற்றுச்சைவராய் வாழ்ந்தனர். அது அவர் செய்துள்ள நூல்களாலும் சந்திர மௌளீசர பூஜாதியாலுந்தெளியலாம். வியாசரும் அகம் பிரமச்சார்பின் மதிமயங்கி நாராயணனே பரம்பொருளென்று விசுவநாத சந்நிதியில் பொய்கூறிக்கை தம்பிக்கப்பெற்று, அந்நாராயணரே வந்து பணிந்து பிரார்த்தித்து வேண்டிப் பெற்ற விசுவநாதர் திருவருளால் தம்ப நீக்கப்பெற்றுச் சைவரேயாகி யுய்ந்தனர். ஸ்ரீராமர் பாலியத்திலே பிரபஞ்சத்தில் விமுகராய், ராஜபாரம் வகிப்பதில் நோக்க மின்றிச் சன்மார்க் கோபதேச விருப்புற்றுக் கிடைக்கப் பெறாமல், எப்பொழுதுந் துக்கமுற்றிருப்பது நோக்கித் தசரதர் வேண்டுகோளுக்காகவே, வசிட்டர் வந்து, (இந்திரனுக்கு அவன் பருவ நோக்கித் தமக்குக் கருத்தில்லாத "மங்கைமாரிடத்தின்பமே யின்பம்" என்பதாதியான காமநூற் போதனை செய்த வியாழபகவான் போலத்) தமக்குக் கருத்தில்லாத நாம் பிரமமென்னும் போதனை செய்து, ராஜ பாரம் வகிக்கும்படி ஏவினராயினும், ராமர், பின்னர் அகஸ்திய ராதியராற் சைவோபதேசம் பெற்றுச் சிவ லிங்க பூஜாதிகள் செய்து சைவராகியே வாழ்ந்தனர். அர்ச்சுனர் யுத்தபூமியிலேகொலைப் பாவத்துக்கு அஞ்சி வில்லையுங் கைவிட்டு நின்றது கண்டு, சமயோஜிதமாகக் கண்ணபிரான் நாம் பிரமமென் றுபதேசித்த போதனை பெற்று அக்கொலைத்தொழிலைச் செய்தாராயினும், அவர் நான் பிரமமென்னுமாபாசநிலையைச் சிறிதுங்கொள்ளாமற் சிவ பூஜையே செய்து சைவராயே வாழ்ந்தனர். ராமர் அர்ச்சுனர் இருவரும் அப்பொழுதுகொண்ட நிலைமைநோக்கி அவர்களை அந்தந்தக் காரியங்களிற் செலுத்துதற்காகவே வசிஷ்டர் கிருஷ்ண ரிருவரும் வாசிஷ்டமும் பகவற்கீதையும் உபதேசித்தார்களன்றி உபதேசித்த இருவர்க்குந் தம் உபதேசம்பெற்ற இருவர்கொள்கையும் அதுவல்லவென்பதை "அருச்சுனர்க்கு-ராமருக்கு மதிகாரமவைநோக்கி யறைந்தநூலின், கருத்தறியாய்"

என்ற மகாராஜா துறவு நூலினாலுங்காணலாம். இந்நூல் நாம் பிரமமென்கின்றவர்களாற் பாராட்டப் பெற்றதே. இனி அந்த வாசிஷ்ட கீதாதிகளிலும் சைவநலங்கள் பொதிந்துள்ளன. இதனை, "அற்பவறிவினர்க்கிந்த வரியமெய்ந்நூ, லீனமுறு மடமைதரு மிதுபோன் மற்றை யெந்த நூல்களு மடமையியற்றுதன்றே" "ஆய்ந்தவென் சிந்தை சிவநாயகன் வசமாகைக்கே யேய்ந்தது நிலையுங்கொள்ளா திறைவனைப் பிரிந்தாள்போல" ஆவாவிப்போதுள்ள படி யறியுநெறியி லெனையறிந்தேன், ஓவாவிகற்பமற்றறிவுள் ளொளியாஞ் சிவனுருவிதுவோ "ஈனமில் சைவாகமர்க்குச் சிவனாய்" என்பன வாதிகளால் விளக்கும் வாசிட்டத்தாலும்" "எண்ணிய வுலகமு முலகுக் கீசனும் புண்ணிய பாவமும் பொய்யென்றே கொள்வார்; கடக்கரிதாய நரகமென்கின்ற கடல்களில் வீழலே கடவார்" என்பன வாதிகளால் விளக்கும் பகவற்கீதையாலும் நன்கு தெளியலாம். அன்றியும் கண்ணர் அருச்சுநர்க்கு விசுவரூபங்காட்டி எல்லாம் நானே என்னைத் தவிர வேறொன்று மில்லை என்னையே நீ சரணாக அடைந்து பூசிப்பாயென்று கூறியது, அக்கண்ணர், உபமன்னிய பகவானுடைய திருவடி சிரமேற்கொண்டு சிவதீக்ஷை பெற்றுச்சிவோ சம்பாவனை கைவரப் பெற்ற திருவருள் வலியாலன்றி வேறில்லை. இதனை "யாதவன் றுவரைக் கிறையாகிய மாதவன் முடிமே லடிவைத்தவன்" என்பதனாலும் இன்னும் பாரதம் அரி வம்சம் முதலிய நூல்களாலும், அர்ச்சுநர், விசுவரூபங்கொண்ட கண்ணரைநோக்கி நீர் யாரென்று கேட்டபோது, நான் ஆதி புருடனையே சரணாக அடைகின்றேனாதலால் அவனே யான் சர்வசங்காரஞ் செய்கின்றவன் நானேயென்று கூறியதனாலும், அது கேட்ட அர்ச்சுநரானவர், அக்கண்ணர் சிவபாவனையால் அச்சிவமாகி நின்று கூறிய உண்மை தெரிந்து, சிவபூசையே செய்து வந்தமை முதலிய பல காரணங்களாலுந் தெளியக் காணலாம். சூரபத்மன், சுக்கிராசாரியாரால் நானே பிரமமென்கின்ற போதனை பெற்று, மிகமிஞ்சிய அக்கிரமங்கள் செய்து, சிவஞானியாகிய சிங்கமுகன் கூறு தலையு மறுத்துவிட்டுப், பின்பு சுப்பிரமணியப் பெருமானாற் சாக்ஷாத் தீக்ஷாதி பெற்றுச் சைவனாகியே வாழ்ந்தான். தத்துவராயர், சிவப்பிரகாசர், சிதம்பர சுவாமிகள் முதலிய பிற்காலத்தவர்களும் தமக்குமேலொரு கடவுளுண்டு, அவன் பரமசிவனே யெனக்கொண்டு, பலநூல்களாற்றுதித்து, ஆண்டா னடிமைத் திறங்காட்டி, வழிபட்டு வாழ்ந்தார்கள். இக்காலத்திலும் சமிவனமென்னும் கோயிலூர் மடத்துக்கு மூலபுருஷராய், ஆண்டவரென்று அவ்வகையாராலேயே கொண்டாடப் பெற்ற முத்து ராமலிங்க சுவாமிகளும், வாசிஷ்ட கைவலிய கீதாதி நூல்கள் பிறர்க்குப் போதித்து வந்தாலும், தமக்கு மேலொரு ஆண்டவனுண்டு, அவன் ஸ்ரீ சாலிவாடீசுவரி சமேத ராஜகட்க பரமேசுரனே, நாம் அவனுக்கு அடிமையேயென்ற உண்மைக் கருத்தாலேயே சைவநெறித் திருப்பணியாதிகளே செய்து பின்னையோரும் அந்நெறியே பற்றி ஒழுகும்படி வழி காட்டியாய் வாழ்ந்தார். பின்பு சிடராய் அங்குவந்த துறவு சுவாமிகளும் அச்சைவ நெறியே மேற்கொ

ண்டு, அக்கோயிலூரில் முப்போதுமுண்டு வசித்திருத்தலின் நோக்கமில்லாமற் சிதம்பர மடைந்து ஸ்ரீமந் நடராஜ தெரிசன செப தவ தியானாதிகளே பெருவாழ்வெனக்கொண்டு ஆண்டானடிமைத்திறமே பேணி ஒருபொழுது பிக்ஷையேற்றுண்டு பிக்ஷைப் பெருவாழ்வினராய் வாழ்ந்தனர்; இவர் துறவின்மகிமை பல. இவரிடத்துச் சீடராய் வந்த மெய்யப்ப சுவாமிகளும்,அங்கு முப்போதுமுண்டு வசித்தலிலும் அக்கொள்கையிலுஞ் சிறிதும் நோக்கமில்லாமல் அக்கோயிலூரை விட்டு நீங்கி மதுராபுரியை யடைந்து, ஒருபோதுண்டு சிவ தீக்ஷாதி பெற்றுச் சித்தாந்த சாஸ்திர முற்றுமுணர்ந்து பிரபஞ்சப் பற்றை வேரறக் களைந்து, ஸ்ரீ சோமசுந்தர பாதங்களையே இறுகப் பற்றிச் செயற்கரிய சிவ நியமானுஷ்டான தற்பர சிவஞானச் செல்வராய், "தாம்பிரமங் கண்டவர்போற் றம்மைக்கண்டாங்கதுவே நாம்பிரமமென்பவர்பானண்ணுதே" என்று எம்போல்வாருக்கும் போதித்து, (௩௰) வருடம் வரை அம்மதுராபுரி எல்லை கடவாமற் சீவன் முத்தராய் வாழ்ந்தனர். பெரியமாதேவ சுவாமிகளும் அக் கோயிலூரிற் சிலகால மிருந்தும் மற்றவர்கள் போல நால்வகை அறுசுவை உணவு கொள்ளாது, வெற்றன்னத்தையும் பசையறக்கழுவியுண்டு‡ சிவஸ்தல சஞ்சாரியாய்ப் பின்பு திருப்பெருந்துறை யடைந்து சிவாநுபூதிச் செல்வராய் வாழ்ந்தனர். அக்காலத்தில், தன வைசியர்களாகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வசிக்கின்ற நகரங்களில் வேறு சைவசித்தாந்த மடாலயங்களில்லாமையாலும்,ஆண்டவருந் திருப்பணியாதிகளேசெய்து பிரபஞ்ச வெறுப்புடையரா யிருந்தமையாலும், பெரியோரையடைந்து நன்மைபெற வேண்டுமென்று விரும்புகின்றவர்களுக்கு இக்கோயிலூர் மடமே புகலாகத்தோன்றப் பெற்று வந்தடுத்தார்கள், அடுத்தாலும், அங்கு ஆண்டவனொருவன் நமக்கு மேலாயுள்ளன், நாமெல்லா மடிமைகளே, நாம் ஆண்டவனைச் சரியை கிரியா யோக ஞான நெறிநின்று வழிபடுதலே முத்தி சாதனமென்கின்ற போதனு விளக்கங் கிடைப்பதருமையாய், எல்லாம் பொய், நானே பிரமமென்கின்ற போதனையே மலிந்து கிடத்தலால், அதில் விருப்பமின்றி மேற்குறித்த பெரியர் அவ்விடத்தை விட்டுச் சென்று ஆண்டானடிமைத்திறமே பேணி வாழ்ந்தார்கள். புண்ணிய பாவமில்லை,சுகதுக்கமில்லை, பந்த மோக்ஷமில்லை, நாம் பிரமம், நாம் எது செய்யினுஞ் செய்யலாம் என்பதே உறுதியாக்கொண்டு, தேகாந்தம் வரையும் மாமிசாதிகளில் மிகப் பிரியமாய்ப் புசித்துவந்தாரும் துறவுக்கு விரோதமான மாதர்போக மேற்கொண்டு அதுவே தேகாந்தமாயினருஞ் சிலருளர்.பாவ புண்ணியமில்லை சுவர்க்க நரக

---

‡ காமாதிகளுக்குப் பயந்து உணவு சுருக்கித் தவஞ்செய்கின்றவர்களே பெரியோர், இதனை "மன்றுடையான் செஞ்சடைமேல் வாளரவுக்குள்ளஞ்சி, யென்றுமதி தேய்ந்தேயிருக்குமா—லின்றுதவஞ், செய்யு முனிவோர் காமத்திப்பிணிக் கஞ்சித் தமது பொய் யுடலை வாட்டுமா போல்." ஒருபோது யோகி மற்றிருபோது போகி முப்போது ரோகி என்பனவற்றாலுங் காண்க.

மில்லையென்ற போதனை இனி எதைத்தான் செய்விக்கமாட்டாது. மாதர் போக மற்றசைவாதீனங்களி லிப்போதுண்டென்பரேல், அவர்கள் பிறரால் ஒரு திரணமாகவு மதிக்கப்படாரென்ப. ஆனால் இவர்களும் போதனை மாத்திரம் நாம் பிரமமென்னுஞ் சார்பன்றிச் செயல்கள் நற்செயல்களே செய்கின்றார்கள். இதன் கருத்தென்னையோ? எல்லாம் பொய்யென்பதைச் செய்கையிற் காட்டாமல் நடப்பது மன்றித் தங்கள் குருமார்களை ஆண்டவரென்றும் வழங்குகின்றார்கள். ஆண்டவரென்ற சொல்லே, தங்கி முள்ளவர்களை ஆண்ட தலைவரென்பதை விளக்கும். அங்ஙனமாகவு மிவர்கள் கீழுள்ள சீவர்களோ யில்லை நாமே பிரமமென்று தங்கீழுள்ள அறியாதவர்களுக்கும் போதித்து பிரமத்துவ சொத்தைத் தம்முடையதென்று நினைக்கின்ற சிவத்துரோகத்துக்கு ஆளாக்குவதென்னையோ? ஆண்டவனுண்டென்ற சொல்லே அவனால் ஆளப்பட்ட அடிமைகளாகிய சீவருமுண்டென்பதைத் தெளிய விளக்கவும், சீவரில்லையென்றிவர்கள் கூறினால், அவன் யாரை ஆண்டவனென்னுங் கேள்விக்கு என் சொல்லுவார்கள். சீவர்கள் வியகாரத்துண்டென்பரேல், வியகாரத்துள்ளசீவன்பரமார்த்தத்து முண்டென்பது முன்னமேவிளக்கினோம். ஆகவே சீவான்மாவும் எப்போதும் நித்தியனென்பது திண்ணமே. சொல்வது போலச் செய்கையு மிருக்கவேண்டும்; அல்லது செய்வது போலச் சொல்வதிருக்கவேண்டும்; இப்பொருத்த மிவ்வொரு வகையாரிடத்துமாத்திரமில்லை, மற்றெல்லா மார்க்கங்களினு முள்ளதே. சீவனில்லை,ஈசுரனில்லை, செகத்தில்லை, இவையெல்லாம் உள்ளனபோலத்தோன்றுதல் மயக்கமே; அது கிளிஞ்சிலை வெள்ளியென்றும், பழுதையைப்பாம்பென்றும், கட்டையைக்கள்ளனென்றும், மயங்குவதுபோல பிராந்தியேயா மென்றும், பிரமம் ஒன்றுதான் உள்ளது நாமே அந்தப் பிரமமென்றும், இன்னுமிவை போல்வனவே இந்த அகம் பிரமவாதிகள் சொல்லுகின்றார்கள்; இந்தநோக்கமாகவே நூல்களைப் படிக்கின்றார்கள், போதிக்கின்றார்கள்.செய்கைகளோ? ஸ்நானானுஷ்டான செப தப தியான விபூதி ருத்திராக்ஷ தாரண சிவாலய சேவை திருப்பணி முதலியனவே, இவர்கள் சொற்படி சீவனே யில்லையானால் யார் இந்தப் பலனை யடைதற்காக இச்செயல்கள் செய்கின்றார்கள். இனிச் சிருட்டிகாலந்தொடங்கி எல்லா உலகங்களிலும் சிவாகம விதிப்படியே ஆலயாதிகள் தீர்த்தங்கள் தலங்கள் மூர்த்திகள் முதலிய வெல்லாம் சீவர்கள் வழிபாடு செய்து நன்மை அடைதற்காகவே விளங்குகின்றன, இவைகளில் அரிப்பிரமேந்திராதி தேவர் முனிவர் முதலியோர் வழிபாடு செய்துய்ந்தார்களென்கின்ற புராணேதி காசாதி சரித்திரங்க ளெல்லாம் பொய்யா? அவர்களாற் பிரதிஷ்டிதமான சிவலிங்காதிகளும் பொய்யா? அவர்கள்பெற்றபலன்களும் பொய்யா? பல்கோடி சீவர்கள் ஆலயாதி வழிபாடு செய்வதெல்லாம் வீணா? அவரவர் பெறும் பலன்களும் பொய்யா? இவர்களே நேரே காண எத்தனையோ சீவர்கள் வழிபடுதலும் வீணா? அவர்கள் பெறும் பலனும் பொய்யா? நல்லது, இவர்களே தங்களுக்கு ஏதேனும் ஆபத்து வந்தபோது செய்

கின்ற செய்விக்கின்ற மந்திர செபங்கள் பூசனைகள் ஆலயவழிபாடுகள் முத லியனவெல்லாமும் வீண் செயல்தானா? அச்செயல்களாலே ஆபத்து நீங்கி விட்டனவென் றிவர்களே சொல்கின்ற சொல்லும் பொய்யா? பல் கோடி சீவர்கள் தமக்கு மேலொரு தலைவ னுண்டெனவே கொண்டு தாங்கள் அடி மைகளாகவே நின்று வழிபாடு செய்துய்கின்ற மார்க்கங்களே மிகுதியாயிரு ப்பது நேரே தெரிந்தும், இவர்கள் ஒரு வகையார்மாத்திரம் தமக்குமேலொ ன்றுமில்லை; தாங்களே பிரமமென்று கொள்வானேன். அப்படிக்கொள்ளா மல் தங்கள் செயலுக் கிணங்கவே வேத வேதாந்தாதி சாஸ்திர சம்மதப்படி தங்களை யடிமைகளென்று நினைந்து வழிபாடு செய்து வந்தால் என்ன கெ டுதி வருமோ? "பலகலை யாகமவேதம் யாவையினுங் கருத்துப் பதிபசுபாசந் தெரித்தல்" என்பதே வேதாந்தாதி சகல சாஸ்திர சம்மதமாயிருக்க, இவர் கள் எல்லாவற்றிற்கும் விரோதமாய் நாங்களே பிரமமென்று கூறுவதெதற் காக? பிரமம், நித்தியானந்தமயமாய்ச், சர்வ வியாபகமாய், என்றும் ஒரேபடி த்தாய், எப்போதும் வேறுபாடில்லாததாய்த், துக்கலேசமுமில்லாததாய்த்தன க்கொருவருணர்த்த வுணர்தலின்றித் தானாகவே பல்லாயிரங்கோடியண்டங்க ளின் நிகழ்ச்சியும் ஏககாலத்தில் ஒருங்கே அறிகின்ற சர்வஞ்ஞாதி திவ்விய மங்கள குணத்ததாய், முக் குணங்களைக் கடந்ததாய் மாயாதிதமா யுள்ளது. இத்தகைய பிரமமே நாங்களென்று இவர்கள் கூறினால், இவர்களிடத்து எப் போது நீங்காத நித்தியானந்த முண்டா? அல்ப ஆனந்தமாவது எப்போது நிலைத்திருப்ப துண்டா? ஏகதேச வியாபகமாவதுண்டா? எப்போதும் ஒரே மாதிரியாயிருப்பதுண்டா? குணங்கள் செயல்கள் வேறு படாதிருப்பதுண் டா? துக்கமில்லா திருப்பதுண்டா? பிறருணர்த்தாம லுணர்வ துண்டா? உ ணர்த்தினாலும் ஒன்றொன்றாக உணர்வதன்றி எல்லாவற்றையும் ஒரேமுறை யிலறிவதுண்டா? முக்குணங்களைக் கடந்திருத்தலுண்டா? பிரகிருதி மாயை யையாவது கடந்ததுண்டா? இவை போல்வனயாதேனுமுண்டா? இவைக ளிலொரு அணுவுமில்லாமல், பிதா மாதா சுக்குல சுரோணித சம்பந்தமுற்று க் கருக்குழியில் பத்து மாசங்கிடந்து, அளவிலாத துன்பமெல்லாமடைந்து, தலை கீழாய் நிலத்தில் வீழ்ந்து மயங்கிப், பற்பல அவஸ்தைப் பட்டு, நீக்கிக் கொள்ள வகையறியாமல், பல ருதவியால் அவிழ்தாதிகளாற் சிறிது சிறிது நீங்கப் பெற்று வளர்ந்து, லெகு லெகுவாகப் பலருணர்த்த வயக்கிரமத்தின ளவாக வுணர்ந்து, உணர்ந்தவையும் மறந்து, பின்னு முணர்த்த நினைந்து, யௌவனம்வந்தபின்னும் தாமாக ஒன்றைச்செய்துகொள்ளமாட்டாமற் பல துணைகளை வேண்டிநின்று, விரும்பிய நன்மைகள் கிட்டாமையும் ஒருவாறு கிட்டினாலுங் குறித்த காலத்திற் கிட்டாமையும் விரும்பாத தீமைகள் கிடை த்தலும் அதை விலக்கிக் கொள்ள முடியாமையுமின்னுமிவைபோல்வனபல ஆபாசங்களுங்கொண்டு கிடக்கின்ற சீவர்களாகிய நாமா? மேற் காட்டிய சுத் தப் பிரமம்? பேதைகளும் விலாக் குலுங்கச் சிரிப்பார்களே யென்றுண்மை தெளிந்து மேற்கூறிய ஆலயாதிகள் உலகெலாம் விளங்குதல் சீவர்களாகிய

அடிமைகள் வழிபடுதற்கே என்பதையும், அவற்றைத்தேவர், முனிவர், மனிதராதியோர் தம்மை அடிமைகளாக நினைத்தே வழிபாடுசெய்துய்ந்தார்களெ ன்பதையும், அவைகளை விளக்கிக் கூறுகின்ற வேதவேதாந்தாதி சகல சாஸ்திரங்களின் உண்மைக் கருத்தையும், உள்ளபடி மேற்கொண் டுய்யும்பொருட்டு, ஸ்ரீகணேச ஸ்கந்தசகித சாம்ப பரமேசுர பாதாரவிந்தங்களைப்பணிந்து பிரார்த்திக்கின்றேன். சுபம். சுபம். சுபம்.

தூர்வை யாசகப் படலம்.

முற்றிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௬	௨௪	அடிமைசிகளே	அடிமைகளே
,,	௩௦	மவனையே	சிவனையே
௮	௧௭	கிடைக்ப்பெறுத	கிடைக்கப்பெறுத
,,	௨௦	வேடிக் கொண்டார்கள்	வேண்டிக் கொண்டார்கள்
௧௧	௩௧	செறிவுற்றஞ்ஞ்ஞான	செறிவுற்றஞ் ஞான
௧௩	௨௩	ஞானசனரென	ஞான சனகரென
௧௪	௩௫	உயிர் நீங்கிய உடம்பைப்	அதனைப்
௧௬	௫	சேர்ந்தனுபவித்ததற்குச்	சேர்ந்தனுபவித்தற்குச்
,,	௧௬	பிராத்தித்து	பிரார்த்தித்து

காரைக்குடி:—"ஞானம்பிகா" ப்ரின்டிங் வொர்க்ஸ். 405-1000-17.